தொழில் உரிமங்கள்.

* வினா எண். 37—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 31-3-1981 ஆம் தேதியன்று மத்திய அரசின் அனுமதி பெறுவதற்காக நிலுவையில் உள்ள தொழில் உரிமங்களின் எண்ணிக்கை யாது?

(ஆ) இம் முறையினை துரிதப்படுத்த மாநில அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

* வினா எண். 38—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980—1981-ம் ஆண்டுகளில் அரசால் எத்தனை கனரக தொழிற்சாலைகள் தொடங்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அரசு பரிந்துரைத்த அனைத்து கனரக தொழிற்சாலைகளுக்கும் மத்திய அரசால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, (அ) 31-5-1982 வரையில் 65. ஆனால், 6-9-1982 முடிய 20.

(ஆ) மற்றும் (இ): மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டு மைய அரசின் முடிவை எதிர்நோக்கியுள்ள விண்ணப்பங்களைப் பற்றி தமிழக தொழில் துறை அதிகாரிகள் அங்கே சென்று வலியுறுத்துகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டும், நேரில் செல்கிறபோதும் மைய அமைச்சர்களைச் சந்தித்துச் சொல்கிறார்கள். தொழில் அமைச்சர் என்ற முறையில் நானும் மாண்புமிகு மைய அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தும், கடிதங்கள் மூலமும் வலியுறுத்தி வருகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, ஒரு சப்மிஷன். இப்படிப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சரவர்கள் ஒரு விவரமான அறிக்கையை அவையில் வைத்தால் அதை உறுப்பினர்கள் பார்த்துவிட்டு, துணைக் கேள்விகள் கேட்க வசதியாக இருக்கும். வெறுமனே எண்ணிக்கையை மட்டும் சொல்லிவிட்டால் எப்படி மற்ற விவரங்களைத் தெரிந்துகொள்வது? ஆகவே, இனிமேலாவது இப்படிப்பட்ட வினாக்களுக்கு விவர அறிக்கை வைக்கும்படி தலைவரவர்கள் டைரக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1982 செப்டம்பர் 8]

திரு ரா. உமாநாத்: விவரம் முழுவதையும் சொல்லிவிட்டால் துணைக்கேள்விக்கு இடமில்லாமல் போய்விடும். நான் கேள்விக்கு வருகிறேன். சபாநாயகர் அவர்களே, இப்போது நிலுவையில் இருக்கக்கூடிய தொழில் உரிமங்களில் மொத்த காபிட்டல் இன்வால்வ்டு எவ்வளவு? அதிலும் தனியார் துறையில் எவ்வளவு? பப்ளிக் செக்டாரில் எவ்வளவு? பிரதானமான பிராஜக்ட் ஏதாவது நிலுவையில் இருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே,

In 1977:

Speciality papers 3600 tonnes
Speeda meter cables, Madras
Nylon tyres, Manali

In 1978:

Industrial machinery, Madras
Cast and forged steel and stainless steel, Chingleput
Tyre retreading-Sundaram Industries

In 1979:

Aluminium Boilers
By products unit
Service crusdores
Industrial Machinery
Gypsem Corporate Board
F.R.B. Finished and solid products
Super-phasphate
Finished leather etc.

மாண்புமிகு தலைவரவர்களே, இப்படிப் பொதுவாக கேள்விகள் வருகிறபோது பதில் அளிப்பதற்கு முன்னால் அவையிலே அறிக்கை வைப்பது சரியாகாது என்று கருதுகிறேன். இந்த வினாக்களுக்கு இன்னும் நிறைய விவரங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் சொல்ல வேண்டுமென்றால் காலம் அதிகமாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால் தனியாக இன்னொரு நாள் தனியார் துறை, கூட்டுறவுத்துறை, பொதுத் துறைகளில் என்னென்ன தொழில்கள், எவ்வளவு காஸ்ட் என்ற விவரங்களை அச்சடித்து அவையில் வைக்கத் தயாராக இருக்கிறேன். தலைவரவர்கள் அனுமதித்தால் இப்போதே சொல்லவும் தயாராக இருக்கிறேன். இன்னும் நூற்றுக்கு மேற்பட்ட தொழில்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 37, 38-க்கான விடைகள் மிகவும் நீளமாக இருப்பதால் அவற்றை அச்சிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் வைப்பார்கள்.

அவ்வறிக்கை வைக்கப்பெறும் அன்று உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்கலாம்.

வினா எண்கள் 39–ம், 40–ம் மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10–10)

(2). தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. அ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இலங்கையிலே மரண தண்டனை அளிக்கப்பட்டிருக்கிற திரு. ஜெகன், திரு. குட்டிமணி பற்றி.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றிய பிரச்சனை பின்னால் வருகிறது. அதனால் இப்போது நான் அனுமதிக்கவில்லை; உட்காருங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அரசாங்கத்தின் சார்பாகவே அதைக் கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னால், பரவாய் இல்லை. அதில் எல்லோரும் பேசிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது....(குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்பதைத் தயவு செய்து முதலிலே கேட்டுவிட்டு பிறகு தீர்ப்புச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வது வெளிநாட்டு விவகாரம். அது குறித்து தலைவர்கள் எல்லாம் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள். அப்படி முடிவிற்கு வந்தவுடனே, சபையில் அதனை எடுத்துக் கொள்ள அனுமதிக்கிறேன். பிறகு நீங்கள் பேசலாம்.